சுடர்
CHUDAR
தந்தை செல்வாவின் முகப்போவியத்துடன் 'சுடர்' பங்குனி இதழ் இப்பொழுது விற்பனையாகிறது.
ஈழத்தின் மிகச் சிறந்த கலை இலக்கிய ஏடு சுடர் ஒன்றே!
விலை ரூபா 1-00.

சுதந்திரன்
SUTANTIRAN
விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது 1947.
வள்ளுவர் ஆண்டு 2007 பங்குனி—22, ந.ஆகிர்—3 (4-4-76) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 48

# விடுவிடென்று வளரும் விடுதலை கிளர்ச்சி கண்டு

# நடுநடுங்குகிறது சிறிமா ஆட்சி!

# சட்டம் போட்டு இயக்கத்தை முறியடித்திட

# 'இட்லர்' வாரிசுகளின் திட்டமிட்ட சூழ்ச்சி!

தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டும் என்ற அடிப்படையில் தமிழர் கூட்டணி இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடத்திவரும் இயக்கங்களைக் கண்டு ஆட்சியாளர்கள் நடுநடுங்க தொடங்கியுள்ளனர். தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அழுத்தமான அரசியல் எழுச்சியும் கரைபுரண்டோடும் விடுதலை வேட்கையும் கண்டு கலங்கியுள்ள ஆட்சியாளர்கள், தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் சட்டங்களை தயாரிக்கும் முயற்சிகளில் இப்போது ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

'இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டையும்", "ஐக்கியத்தையும்" கட்டிக்காப்பது என்ற போர்வையில் பயங்கரமான பல சட்டங்களை கொண்டுவந்து, தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை நசுக்குவதற்கு இப்போது திட்டமிடப்பட்டு வருகிறதாம்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்கள் பிரதேசத்தை தாங்களே ஆளவேண்டும் என்று நடத்திவரும் கிளர்ச்சியைவேரோடு கெல்லியெறியவும், தமிழ் தேசிய இனம் தனது இன, மொழி, கலை, கலாசார, பிரதேச தனித்துவத்தையும் பாரம்பரியங்களையும் காப்பாற்ற வேண்டும் என்று குரல் கொடுப்பதையும் போராடுவதையும் சட்டவிரோதமாக்கவும் இப்போது திட்டமிடப்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன.

'சிங்களம் மட்டும்"பௌத்தத்துக்கு முதலிடம்' என்ற இப்போதைய அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள அம்சங்களின் அடிப்படையில் அவற்றுக்குட்பட்டு நாட்டில் "தேசிய ஒற்று

—8-ம் பக்கம் பார்க்க

## சிறைக்குயிலுக்கு இன்று பிறந்த நாள்!



சிறையிலிருக்கும்செந்தமிழ்க்குயில்—ஈழத்தின் புரட்சிக்கவிஞர் — மீன் பாடும்தேனுடுபெற்றெடுத்த உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தனின்பிறந்த நாள் இன்று ஆகும். இந்திய விடுதலைக்கு ஒரு பாரதிபோல — பாகிஸ்தானத்து விடுதலைக்கு ஒரு இக்பால்போலதிராவிட இயக்கத்துக்கு ஒரு பாரதிதாசன்போல— ஈழத்தமிழ் இயக்கத்துக்கு கிடைத்த ஒப்பற்ற மாகவிஞன் காசி ஆனந்தன்.

ஏற்கனவே இரண்டரையாண்டுகள் தமிழுக்காக சிறையில் தவமிருந்த கவிஞர், கடந்த ஆவணி முதல் மீண்டும் சிறைக்குள் வாடி வருகிறார். ஆனால் அவர் எழுப்பிய "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்ற புரட்சிக் குரல் விண்ணதிர மண்ணதிர — எங்கும் முழங்குகிறது.

சிறைச்சாலையில் அவர் கழிக்கும் மூன்றாவது பிறந்த நாள் இதுவாகும்!

தன்னை மட்டுமன்றி தன் தம்பியர் இருவரையும் உரிமைவேள்விக்கு பலிக்கடாவாக்கி தமிழினம் வாழ தம்மை அழித்துவரும் காசி ஆனந்தனுக்கு தமிழ் சமுதாயம் என்ன கைம்மாறு செய்யப்போகிறது!

குலம் காக்கும் போரில் கவிஞர் குடும்பம் முழுவதுமே தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறது!

தமிழைத் தாழ்த்திய அரசியல் சட்டத்தை ஏற்க மறுத்து, அரச உத்தியோகத்தை உதறியெறிந்து, சிறைவாழ்வை ஏற்று செந்தமிழுக்காக தன்னை அழித்துவரும் அந்தத் தியாகச்சுடர்—காசி ஆனந்தன்—வாழ்க என வாழ்த்துகிறோம். —ஆர்

# தமிழர் பிரச்சினையையே பகடைக்காயாக வைத்து அடுத்த தேர்தல் பிரச்சாரம்!

## சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் திட்டம்!

தமிழர் பிரச்சினையையே பகடைக் காயாக வைத்து அடுத்த பொதுத் தேர்தலில் சிங்களவர் மத்தியில் பிரசாரம் செய்ய சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் திட்டமிட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. பிரதமரின் புதல்வர் அனுரா பண்டாரநாயகா இத்தகைய பிரசாரத்தை ஏற்கனவே ஆரம்பித்தும் விட்டார்!

"தமிழர் கூட்டணி நாட்டைப் பிரிக்கப்போகிறது; நாட்டைப் பிரிக்கும் நாசகாரர்களாகிய தமிழர் கூட்டணிக்கும், ஐக்கியதேசியக்கட்சிக்கும் இரகசிய

—8-ம் பக்கம் பார்க்க

## திருமண அழைப்பிதழ்.

மணமகன்: செல்வன் சி. துரைராசசிங்கம்.
(விஜயா ரைஸ் மட்பாண்டக் கூட்டுஸ்தாபனம், பிலியந்தலை.)
மணமகள்: செல்வி இ. உமாதேவி.
நாள்: இராக்ஷத ஆண்டு பங்குனித் திங்கள் 23ம் நாள் 5—4—76 திங்கட்கிழமை.
நேரம்: நண்பகல் 12.45 முதல் பி. ப. 2.41 வரையுள்ள கடக இலக்கின சுபவேளை.
இடம்: கொக்குவில் கிழக்கு கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் (நந்தாவில்)

திருமண விழாவிற்கு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

வரவேற்புவைபவம்: மணமகன் இல்லத்தில் (5-4-76) மாலை 6.30 முதல் 9.30 வரை

இங்ஙனம்,
திரு. செ. இராசையாவும் (நடராசா) பாரியாரும், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
திருமதி சின்னையா சுந்தரம், சைவமடம், கட்டுவன் தெல்லிப்பழை.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சுப்பையா,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் பிரச்சினையில் இலங்கரத்தினவுக்கு திடீரென அக்கறை ஏற்பட்டதேன்?

ப: எல்லாமேவெறும்பாசாங்கு! இலங்கரத்தினவின் அமைச்சிலேயே பெயர்ப் பலகைகள் யாவும் தனிச் சிங்களத்திலேயே தொங்குகின்றன. அதிலே தமிழை இடம்பெறச் செய்ய அக்கறை காட்டாதவரா அரசியமைப்புச் சட்டத்தில் தமிழுக்குஇடம் தரப்போகிறார்?

கே: ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஐம்பது மந்திரிகள் திட்டம் அமுலுக்கு வந்தால்...?

ப: வந்தால் என்ன? கொஞ்சப்பேருக்கு வேலையில்லாப் பிரச்சினை தீரும்—தடுக்கிவிழுந்தாலும் ஒரு மந்தி(ரி)யின்மீது தடுக்கி விழவேண்டியிருக்கும்!

கே: தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் தரப்படுத்தல் அகற்றப்படும் என்கிருரே ஜே. ஆர்?

ப: தரப்படுத்தல் மட்டும் தான் தமிழனது பிரச்சினையில்லையே! மண்ணிலின்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினை இழப்போமா?

ஃ

எஸ். சிவனேசராசா,
ஆறுமுகத்தான் குடியிருப்பு
செங்கலடி.

கே: இந்தியப் பிரதமர் இந்திராவும் இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோவும் எப்படிப் பட்டவர்கள்?

ப: தவறிப்போய் பெண்களாகப் பிறந்துவிட்ட ஆண்கள்; தமிழனும், தமிழனும் இணைவதை விரும்பாதவர்கள்!

கே: தமிழ் நாட்டில் மீண்டும் திமுக—ஆட்சியை கைப் பற்றுமா?

ப: தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்—தர்மம் மறுபடி வெல்லும்!

கே: கலப்புத் திருமணம் நடைபெறுவதால் மட்டும் சாதியொழிப்பு நடைபெறுமா?

ப: கலப்புத் திருமணங்கள் தீவிரப்படுத்தப்பட்டால் ஒரு தலைமுறையில் சாதிக்கு சமாதி கட்டிவிட முடியும்!

ஃ

எஸ். ஜே. வசந்தன்,
அரசினர் வைத்தியசாலை,
முந்தல்.

கே: இலங்கையின் ஆயிரக்கணக்கான தமிழர் வாழும் ஒரு பகுதியான உடப்பு ஊரில் தமிழர் கூட்டணியின் கிளையொன்று ஆரம்பித்து வைக்க முடியுமா?

ப, அங்கு ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யுங்கள். அதிலே கலந்துகொண்டு கிளையையும் அமைக்கலாம்!

ஃ

க. சிவராசா,
நாகர்கோயில்.

கே: யார் உயர்ந்த மனிதன்?

ப: வெள்ளத்தனையமலர் ந[illegible]—மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு என்கிருர் வள்ளுவர்.

கே: நம் மத்தியில் உள்ள மூடக்கொள்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: சுட்டுப்பொசுக்க வேண்டிய குப்பை கூளங்கள் என்று நினைக்கிறேன்!

கே: ஏமாற்றுப் பேர்வழிகள் சிலர் வந்து ஏமாற்றுவதன் நோக்கமென்ன?

ப: ஏமாறுபவர்கள் ஏமாருமலிருந்துவிடக்கூடாது என்பதுதான்!

அல்வை. சி. தர்மநாதன்,
'தமிழகம்',
உருத்திரபுரம்.

கே: சிறு சிறு பட்டம் பதவிகளுக்காகத் தன் இனத்தை விற்றுப்பிழைக்கும் கூட்டத்தை யாருக்கு ஒப்பிடலாம்?

ப: தாயின் கற்பை விலை பேசும் சண்டாளர்களுக்கு!

கே: எனது நண்பரொருவர் தேர்தலுக்கு முன்னர் சினக் கம்யூனிஸ்ட் தேர்தலில் காங்கிரஸ். பின்னர் ஸ்ரீலங்கா. தற்போது ஒரு கட்சியும் இல்லை. இவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: டார்வினின் சித்தாந்தத்தை உங்கள் நண்பர் உறுதிப்படுத்திவருகிருர்! இனிப் பச்சைக்குத் தாவினும் தாவுவார்!

ஃ

'ஜனபால மோகன்'
கொழும்பு—3.

கே: தியாகத்துக்கு இலக்கணமாய், வீரத்திற்கு இலக்கியமாய், கடமையுணர்வின் காவியமாய் விளங்கும் அருமை அண்ணாவே, 'சிங்கள ஆட்சி தமிழர் பண்பாட்டைக் சுட்டெரிக்கும் செந்தீ, தமிழ்ப் பூம்பொழிலை அழிக்கவரும் மந்தி, சாய்த்திடுவோம் நாம் அதனை முந்தி' என்று சூளுரைத்து களம் நோக்கிச் செல்வோமா புரட்சிக் குயிலே?

ப: அதற்கான காலம் விரைந்து வருகிறது: அது வரை பொறுத்திருங்கள் தம்பி!

ஃ

எம். மகாலிங்கம்,
மெயின்வீதி, பசறை.

கே: சிங்களம் பேசும் அனைவரும் சிங்களவரே; தமிழ் பேசும் அனைவரும் தமிழரே, அப்படியிருக்கும் போது "மலைநாட்டு" "தமிழரை" "தமிழர்" கூட்டணியினர் ஒதுக்குவதேன்?

ப: ஒதுக்கிறதா? தவறான குற்றச்சாட்டு. தமிழர் அனைவரையும் இணைப்பதுதான் தமிழர் கூட்டணியின் இலட்சியமே தவிர யாரையும் ஒதுக்குவதல்ல!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

> திருவாளர் குயுக்தியார்,
> 194 ஏ. பண்டாரநாயகா வீதி,
> கொழும்பு-12.

# சிறையிருக்கும் செந்தமிழ்க் குயில் - உணர்ச்சிக் கவிஞன் வாழ்க பல்லாண்டு!

## கவிஞன் வாழ்க!

செ. சிவானந்ததேவன்

முத்தமிழ்க் கலையெல்லாம் முறையுடன் கற்று
 முனிவிலா நெஞ்சிலே முளுவதும் பெற்று
நித்திலம் சொழித்திடும் தத்துவக் கடலாய்
 நினைவெலாந் தமிழர் நிலையிலே செலுத்தி
சத்திய நெறியுடன் தமிழினம் வாழ
 சமத்துவ நோக்குடன் தயங்கா(து) உழைக்கும்
வித்தகச் சுடரே! விரிபுகழ் காசி
 ஆனந்த னென்னும் அறிஞநீ வாழ்கவே!

நாட்டில் எங்கள் செந்தமிழ் செழிக்க
 நலமுடன் முயன்று நாளெலா முழைத்து
ஏட்டில் எழுத்தில் எம்மவர் குறைகளை
 எடுத்துக் காட்டி இழிநிலை யகல
பாட்டில் பொருளுற பலபட வடித்து
 பண்பிலார் சிலரின் பகையால்; சிறையாம்
வீட்டில் கிடந்து வேதனை யுற்ற
 வீரத் தமிழநீ விரைந்து வருகவே!

ஆண்டுகள் பலவாய் ஆண்ட பரம்பரை
 ஆதியும் அந்தமும் அறியாத் தமிழினம்
மீண்டுமிப் புவிதனை மீட்பது குறையோ?
 மேலும் தமிழரை வதைப்பது முறையோ?
சண்டிவ் வாறுநீ எழுப்பிய குரலால்
 ஈடில்லாத் துயருடன் எழியவர் சிறையில்
நீண்டநாள் உழன்ற நீதியின் ஊற்றே!
 நேசத் தமிழர்தம் நேசனே வாழ்கநீ!

தூங்கிய தமிழர்தம் துயிலினைக் களைந்து
 துட்டர்கள் விழைக்கும் துயர்களை விளக்கி
ஏங்கியே நித்தமும் எந்தமிழ் மாழ்வதா?
 "ஏடா தமிழா?" எடுடா வாளை
தேங்கியே நிற்பதால் சுதந்திரம் கிட்டுமா?
 தேர்ந்துநீ உணர்ந்து தெளிவுற் றெழுகவென்
றோங்கியே முளங்கிய உத்தமத் தமிழனே!
 ஓண் தமிழ்த் தேசம் ஒளிபெற வாழ்கவே!

வள்ளுவன் காட்டிய வழியினில் நின்று
 வருமிட ரெல்லாம் வாழ்வினில் வென்று
உள்ளுவர் நெஞ்சம் உவகையில் பொங்க
 உளமெலாம் தமிழெனும் உணர்ச்சியே தங்க
தென்னுநற் தமிழில் திறனெலாம் குழைத்து
 தீந்தமிழ்க் கவிதைகள் தீட்டியே நல்கும்
அள்ளுநற் சுவையுறு அறிஞனே! காசி
 ஆனந்த னென்னும் அன்பநீ வாழ்கவே!

★ ஏப்பிரல் 4— காசியின் பிறந்த தினம்.

கண்டேன் கண்டேன் காசியைக்கண்டேன். காசி என்றதும் நீங்கள் புண்ணியஸ்தலமான காசியை எண்ணி விடாதீர்கள்: அது வெறும் காசிதான். அங்கே ஸ்தலம்தான் உண்டு. ஒரு மதச்சார்பான மக்கள்தான் திரளுவர். ஆனல் நான் கண்டது வெறும் ஸ்தலமல்ல. அந்தப் புண்ணிய ஆலயமுமல்ல, ஆலயத்திலே உறைகின்ற தெய்வம் அது. அந்த நடமாடும் தெய்வத்தைக் கண்டேன். அந்தத் தெய்வம் வேறுயாருமல்ல காசி ஆனந்தனேதான்.

வரம் கேட்டு நேர்கடன் வைத்து காசிக்குச் செல்லும் மக்களை எல்லாம் விட்டு பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அருள்வழங்க அமுதமழை பொழிய ஆத்மசாந்தி அளிக்க ஆக்ரோஷத்தால் கொதிப்பேறிய கொள்கை வெறியற்கு ஆறுதல் தர அமைதியாக அடக்கத்தின் திருவிளக்கமாக ஆண்மையின் அரிமாபோலும் அன்பின் இருப்பிடமாய், உணர்ச்சியின் உறைவிடமாய், திகழும் எங்கள் அருள் தெய்வம் காசி அண்ணன் வந்தார் யாழ் நகருக்கு. கண்டோம் களிகொண்டோம். களைக்கூத்தாடினும். கரைபுரண்டோடும் காட்டாறெனஅணைகடந்த வெள்ளமென ஆனந்த மேலீட்டால் ஆடினேன், பாடினேன். அத்தனை இன்பம்.

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம். வீரம் கொள் கூட்டம் அன்னர் உள்ளத்தால் ஒருவரன்றி உடலினுற் பலராய்க்காண" வெள்ளமாக [illegible] கள் குவியலிலே கோட்டை மைதானத்திலே தமிழன்னை தந்த தண்டமிழ்ச் செல்வி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் சொற் பெருக்காற்றியவேளை; நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சிமாநாட்டிலே இறுதிநாள் தமிழரின் எழுச்சிக்கு வித்திட்டு இன்னுயிரை மாய்த்த இன்பத் தமிழர் ஒன்பதின்மாருக்கும்அஞ்சலி செலுத்திய வேளை தான் மக்கள் வெள்ளத்தின் ஓர் பகுதி திரண்டெழுந்து அலைமோதியது. நிலைமையைப் புரிந்துகொண்ட அண்ணன் அமிர் எழுந்தார். தளபதி நான்தான் என்பது அவர் செயலால் புரிந்தது. சேனைத் தளபதியாகி தருணமறிந்து தடைவிதித்தார். மக்கள் வெள்ளம் தானைத் தளபதிக்கு தலைசாய்த்தது எங்கும் பேரமைதி ஒரே நிசப்தம்.

வளலாயூர்
வளவைத்தம்பி

அந்த வேளை அந்தி வானத்து அழகு நிலாவென, ஆழ் கடலெழும் ஆதவனென அண்ணன் காசி ஆனந்தன் மேடையில் தோன்றினார். சிறைப்பூங்காவில் வாடிப்போன தளிருடல், உருண்ட கண்கள் செவ்வரிபடைத்த செம்மையின் திருவிழிகள். தினவெடுத்த தோள்கள். இரும்பினைப்பழிக்கும் உறுதி கொண்ட நெஞ்சம், கருணை ததும்பும் கவலையற்ற வதனம் அடர்ந்து செழித்த தாடி. இத்தனையும் தாங்கிய ஓர் அற்புத உருவம் தான் காசி! கதிரொளிகண்ட கமலம் போல் களிப்பில் மூழ்கினர் மக்கள். வான் மழைக்காக வாடியபயிர் வான் மழை கண்டு அசைந்தாடியதுபோல சுதந்திர வேட்கையால் வாடிய மக்கள் எதையோ பெற்றுவிட்ட ஒரு வித பிரேமை. நான் முந்தி நீ முந்தி என்றுமுண்டி அடித்துக்கொண்டு இரத்தத்திலகமிட்டனர்.

காண்டீபம் ஒலித்தது போல், கோதண்டம் அசைந்ததுபோல் செற்றலம் வென்று செருக்களமாடிய பொற்புடைவீரனென ஒலித்தார், முழங்கினர், சங்கொலித்தது போல் ஒலித்தார். கோன்முறையறியாக் கொற்றவர்க் கும்பலை கொள்கை நெறியில் நின்று சாடினர். வானைக்கடந்து சந்திரமண்டலத்தை எட்டிப்பார்த்தது மக்களின் கரகோஷம். மறவர்படைக்கு அடிப்படை வெளிப்படையான அறப்படையே என்று அழகு தமிழால் ஆக்ரோஷித்தார். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று அண்ணு முழங்கியவழியில் முழங்கினர்.

ஒரு கணம் மக்கள் தம்மை மறந்து கண்ணீர் உகுந்தனர்: ஆம் கொள்கை அற்ற குள்ளநரிகள் கொடுமை செய்யும் கெடுமதியாளர் கொள்கைக் குன்றினையா சிறைவைத்தனர் என்ற ஏக்கத்தின் தாக்கமே அது. நேரம் ஒன்பது முப்பது மக்களை விட்டு, மக்களின் மேடையை விட்டு விடை பெற்றார்.

அண்ணன் காசியை அமெரிக்க நாட்டு மாட்டின் லூதர் என்பதா? கிரேக்கத்தின் சாக்கிரட்டீஸ் என்பதா? பொதுவுடமைத் தந்தை கார்ல்மாக்ஸ் என்பதா? தென்னுட்டுக்காந்தி என்

—6-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கரத்தினவுக்கு பண்டிதர் பதில் — (2)

# ரொடீசிய அயன்சிமித்தை விட கொடிய இனவெறியர் நீங்களே!

"அமைச்சர் இலங்கரத்தின அவர்களே! நீங்கள் நிறைவேற்றிய தமிழ் மொழிச் சட்டத்தின்படியும் நீங்களும் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கும் தமிழ் மொழிச் சட்டப் பிரமாணங்களின்படியும் தமிழில் எழுதும் கடிதங்கள் முதலியவற்றுக்குத் தமிழிலே மறுமொழி அனுப்பப்படல் வேண்டும். இச்சட்டத்துக்கு மாருக தமிழில் மறுமொழி அனுப்பமாட்டோம்; வசதியானல் தமிழ் மொழி பெயர்ப்பு அனுப்புவோம் என்றுகூறும் நீங்களா [illegible]டித்த தீவிரவாதிகள்? அல்லது தமிழில் மறுமொழி பெறும் உரிமை எங்கள் பிறப்புரிமை. இந்த உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று கேட்கும் நாங்களா தீவிரவாதிகள்? மனச்சாட்சி உமக்கிருந்தால் உண்மையைக் கூறும்!

"தமிழ உரிமையைப் பறித்துத் தமிழரை அடிமைப்படுத்தும் ஏகாதிபத்தியவாதிகளான உங்களுக்குக் காவ்பிடிக்கும் "வால" பிடிக்கும் தமிழர்களை மனிதர்கள் — மானமுடையவர்கள் என்று கூறலாமா? மானம் இழந்து மதிகெட்ட துரோகிகள் என்று கூறலாமா? இந்தத் துரோகக் கும்பல் உங்களுக்கு மாலையிட்டுக் கொடிகுடை பிடிப்பதன் காரணம் என்ன? இந்த துரோகக் கும்பலில் நீங்கள் கொடுத்த பதவியைப் பெருதவர் ஒருவர் தானும் உளரா? செல்லையா குமாரசூரியர் முதலான பலர் உங்களுக்கு உபகாரஞ் செய்வது நீங்கள் கொடுத்த பதவிகளுக்குத்தானே! இந்தப் பதவிப் பித்தர்களை விட வேறு யாரேனும் உங்களை ஆதரிக்கின்ருரா? செல்லையா குமாரசூரியர் நடு இராத்திரியில் பதவிபெறமுன் எங்கிருந்தார்? பதவி போனபின் எங்கு இருப்பார்?

தமிழ் மொழிபெயர்ப்புத்தான் தருவோம் என்று கூறிக்கொண்டு மொழி பெயர்ப்புக்கூடத் தராமல் தனிச் சிங்களக் கடிதங்களையும் பிறவற்றையும் தமிழ் மக்களுக்கு அனுப்பும் நீங்களா வடிகட்டின வகுப்புவாதிகள்! தனிச் சிங்களக் கடிதத்தை ஏற்கமாட்டோம்! தமிழ் மொழியை அழிக்க அனுமதியோம் என்று உரிமைக்குப் போராடும் நாங்களா வகுப்புவாதிகள்?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் அரசாங்க நிருவாகம் நடைபெற அரைகுறைச் சட்டத்தால் வழிவகுத்து ஊரையும் உலகத்தையும் ஏமாற்றிக்கொண்டு நடைமுறையில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே நிருவாகத்தை நடத்தும் நீங்களா? நீதிநியாயம் பற்றிப் பேசுகிறீர்கள்!

பல்கலைக்கழக வளாகங்களில்சேருதற்குத் தமிழ்மாணவர்களுக்குக் கூடிய புள்ளிகளும் சிங்களமாணவர்களுக்குக் குறைந்த புள்ளிகளும் தேவை என ஒரு இனத்துக்கு ஒரு நீதி பேசும் நீங்[illegible] சமதர்மவாதிகளா? ஏகாதிபத்தியவாதிகளா?

உதைக்கின்ற உங்களை உபசரித்துப் போற்றும் தமிழ்த் துரோகிகளா? அல்லது உங்களை எதிர்த்து உங்கள் அநியாயத்தை உலகமறியச் செய்துவரும் நாங்களா ஏகாதிபத்திய தாசர்கள்!



தமிழ் மக்களின் பரம்பரை நிலங்களில் சிங்களவரைக் குடியேற்றித் தமிழ் நிலத்தைப் பறித்துவரும் நீங்கள் இனவெறியர்களா? எங்கள் நிலத்தைப் பறியாதீர்கள் என்று குரல் எழுப்பும் நாங்களா தீவிரவாதிகள்?

தமிழ் மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் உடன்பாடுமின்றிப் பௌத்த சிங்கள

## குமாரசூரியர் ஏகாதிபத்தியத்தின் 'குவிஸ்லிங்'!

ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுதற்குக் குடியரசு என்ற போர்வையில் ஓர் அரசியல்அமைப்பைத்தமிழ் மக்கள் மீது திணித்துவிட்டு நாங்கள் தமிழ் மக்களுக்கும் போதிய உரிமைகளைக் கொடுத்திருக்கிருேம் என்று கொக்கரித்த நீங்கள் ரூடேசியாவின் அயன்சிமித்திலும் கொடிய இனவெறியர்களல்லவா?

நாங்கள் மானத்தோடு மரியாதையோடு தலைநிமிர்ந்து வாழுதற்குத் தனி ஆட்சி செய்தலே — தமிழ் ஈழத்தை நிறுவுதலே ஒரே பொருவழி — மாற்ற முடியாத கடைசிவழி, எவ்வளவு தியாகஞ் செய்தும் அடையவேண்டிய வழி என்று முடிவு செய்ததைக் கண்டவுடன் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கலாம், அரசியல் அமைப்பில் தமிழர்களின் உரிமைகளையும் சேர்த்து[illegible] என்று ஓலமிடும் உங்களை இன்னும் தமிழர்கள் நம்புவார்கள் என்று அங்கொடையிலுள்ள பைத்தியகாரர்கள் கூடக் கூறமாட்டார்களே! இந்த உண்மையைக்கூட உணரமுடியாத உன்மத்தர்களாக நீங்கள் உளறுவதைக் கேட்டு அழுவதா? சிரிப்பதா?

உங்களுடன் சேர்ந்து வந்து, உங்கள் நிழலில் உபகாரம் பெற்று, இடையிடையே தம் அடிமைத்தனத்தை உங்கள் சந்நிதானத்தில் விளக்கிக்காட்டிய அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் யாருடைய பிரதிநிதி? நீங்கள் சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். ஆனல் திரு. குமாரசூரியர் தமிழரால் தெரிவுசெய்யப்படாதவர்; ஏகாதிபத்தியத்தின் தலைவியால் நியமிக்கப்பட்ட ஒரு "குவிசிலிங்" என்பதை யாரேனும் மறுக்க முடியுமா? இவருக்குத் தமிழ் மக்களின் சார்பிலே பேச என்ன உரிமை இருக்கின்றது? இந்தஉரிமையை இவர் நிலைநாட்டுதற்குக் காங்கேசன் துறை இடைத்தேர்தலும் மன்னர் இடைத்தேர்தலும் வாய்ப்பளித்தனவே. இவற்றில் ஒன்றிலாகுதல் அவர் போட்டியிட்டுத்தமிழ் மக்களிடையே தமக்குள்ள ஆதரவைக் காட்டியிருக்கலாமே! இதனைச்செய்யமுடியாத இவர் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்குத் தரகு வேலை பார்ப்பதை இனியாகுதல் விட்டுவிடலாமே!

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் பணத்தைச் செலவுசெய்யாமல் யாழ்ப்பாணம் பொருளாதாரத்துறையிலும் புறக்கணிக்கப்படுகிறதென்று கூறுகிருர்கள் என்று ஓர் "அவுட்டா" விட்டிருக்கிருர் அமைச்சர் குமாரசூரியர். தமது எசமான் திரு. இலங்கரத்தினவைப் பிரீதிப்படுத்தத்தான் கூறினர் எனினும், யாழ்ப்பாணம் [illegible] பதைத் தொடர்ந்து அழுத்[illegible] பிரதம அமைச்சருக்குப் பாராளுமன்றத்திலும் வெளியேயும் சுட்டிக் காட்டிவரும் யான் [illegible]ருக்கும் உண்மையை விளக்கவேண்டியுளது.

எனது தொகுதியில் பேசும் பொழுதுதான் திரு. குமாரசூரியர் இந்தச் செய்தியைத் திருவாய் மலர்ந்தார். பொதுநல நாட்டுப் பாராளுமன்ற இலங்கைக்கிளை நடத்திய இரவு விருந்தில் என்னுடன் உரையாடிய திரு. குமாரசூரியர் எனக்குக் கூறியதையும் அவருக்கு நான் கூறியதையும் இங்கு கூற விரும்புகிறேன்.

(தொடரும்)

## வேட்கை

என்னருந் தமிழ் நாட்டிலோர்
ஏவுகணைத் தளம் அமைத்து
செந்நெருப் பெழுந் தாட ஓர்
கோரக் கணை செலுத்தி இந்த
மண் நடுங்குற நானுமோர்
வீரன் எனத் தலை நிமிர்த்தி
புன்னகை அடியேன் பூக்கும்
ஓர் திருநாள் புறப்படாதோ?

செந்தமிழ் நாட்டுக் கடல்
நீர் மூழ்கிகள் படை சினந்து
சுந்தரத் தமிழ் மண்ணுெடு
நாளும் சுரண்டுவார் நிலங்கள்
வெந்தெரிந்து சாம்பல்பட
ஓடி விரைந்து குண்டு கக்கும்
அந்த வெம்போர் யான் காண
ஓர் நாள் அட புறப்படாதோ?

குன்றுகளென மண்மிசை
குவியும் கணைப்பொறித் தேர்கள்
என்றமிழ் இனத்தார்கொண்டு
நீறுபடப் பகை இடித்துக்
கொன்று பிணமெலாம் நூறு
நூருய்க் குவித்திடல் கண்டுயான்
இன்றமிழ்ப் பரணி செய்நாள்
ஒன்றென் எதிர் புறப்படாதோ?

நெஞ்செனும் மலை ஒன்ருெடும்
முப்படையினெடும் தமிழன்
பஞ்செனப் பகைக் கூட்டங்கள்
உழக்கிப் பறந்து புயலாகி
வெஞ்சமர் நிகழ்த்தும் பொன்னுள்
ஒன்று விரைவினில் ஈண்டுயான்
மிஞ்சு களிகொள்ள ஓடி
இம்மண் மிசை புறப்படாதோ?

காசிஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மூப்பனர் பார்வைக்கு!

தமிழ் நாட்டு (இணைப்பு) காங்கிரசின் தலைவராகப் புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு கருப்பையாமூப்பனர் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பத்திரிகை யொன்றுக்கு பேட்டியளித்திருக்கிருர். இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் நாடான இலங்கைக்கு என்றென்றும் விசுவாசமாக இருக்கவேண்டும் என்று அவர் தமது பேட்டியில் குறிப்பிட்டிருக்கிருர்.

திரு. மூப்பனர் அரசியலுக்குப் புதியவர்; அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை சரியாகவும், தெளிவாகவும் தெரிந்து வைத்துக்கொண்டு இப்பேட்டியை அளித்திருப்பாரென்று நாம் நம்பவில்லை; அப்படித் தெரிந்து வைத்திருப்பாரென்ருல்—இப்படியொரு புத்திமதி இலங்கைத் தமிழர்களுக்கு அறவே அவசியமில்லாதது என்பதும் அவருக்குப் புரிந்திருக்கும்!

இலங்கைத் தமிழர்கள் நாட்டின் மீது வைத்திருக்கும் எல்லையற்ற விசுவாசத்தையும், அன்பையும் யாரும் குறைத்து மதிப்பிடமுடியாது.

வரலாற்றுக் காலத்தில்கூட—யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியம் போர்த்துக்கீசரால் தாக்கப்பட்டபோது—அதை மற்ருேர் நாட்டுப் பிரச்சினையென்று கருதிக்கொண்டு யாழ்ப்பாண அரசுக்கு உதவி கொடுக்காத கண்டிச் சிங்கள அரசு வாழாவிருந்தது; ஆனால் தமிழ் மண்ணான வன்னியை ஆண்ட தமிழன் பண்டார வன்னியனே, ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு கண்டி சிங்கள மன்னனுக்கு படை உதவி செய்திருக்கிருன்! இது வரலாறு பேசும் உண்மை!

ஆக — வரலாற்று ரீதியாக, தமிழனுக்கு முழு இலங்கை மீதும் இருக்கும் விசுவாசம், சிங்களவனுக்கு இல்லையென்பது இதனல் உறுதிப்படுத்தப்படுகிறது!

இந்த நாட்டிலிருந்து ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த சுதந்திரக் கிளர்ச்சியிலும் தமிழனே முன்னணியில் நின்ருன்! அவன் தன்னுடைய தமிழ் ஈழத்துக்கு மட்டும் சுதந்திரம் தந்தால் போதுமென்று கோரவில்லை; முழு இலங்கைக்குமே சுதந்திரம் கோரினன்.

பல தலைமுறைகளாக அட்டைக்கடிக்கும் அவதிகள் பலவற்றுக்கும் ஆளாகி, காட்டையழித்து மலைத்தோட்டம் கண்ட தமிழன், நாட்டுப்பற்றற்றவனு? அல்லது அவனது உரிமைகளைப்பறித்து கள்ளத்தோணியாக்கி, நன்றிகொன்று நாட்டை விட்டோட்டுவோர் நாட்டுப் பற்றற்றவர்களா என்பதை மதிப்புக்குரிய மூப்பனர் சிந்திக்கவேண்டும்!

இந்நாட்டைப் பயமுறுத்திய உணவுப்பஞ்சம் வந்தபோது—உப உணவுப்பொருள் தட்டுப்பாடு வந்தபோது ஓயாது உழைத்து உணவுப் பஞ்சத்தைப் போக்கிய தமிழனுக்கா நாட்டுப்பற்றுப்பற்றிப் போதிக்க வேண்டும்?

நாட்டுப்பற்றும், விசுவாசமும் ஈழத் தமிழனிடம் பொங்குவதாலேதான்—அவன் தனது நாட்டைத்தானே ஆளவிரும்புகிருன் என்பதையும் மதிப்புக்குரிய மூப்பனர் புரிந்துகொள்ளவேண்டும்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஒரு குடும்பப் பிரச்சினைக்கு ஒப்பிட்டிருக்கிருர், திரு. மூப்பனர். இங்கேதான் திரு. மூப்பனர் தவறுவிட்டிருக்கிருர்!

இலங்கைப்பிரச்சினை—ஒருகுடும்பப்பிரச்சினையல்ல—இரண்டு குடும்பங்களுக்கிடையிலான பிரச்சினை.

ஒரே வளவுக்குள் இரண்டு வீடுகள் கட்டி நீண்டகாலமாக தனித்தனியாக வாழ்ந்துவந்த இரண்டு குடும்பங்களின் பிரச்சினை.

இன்று ஆதிக்கபலமும் எண்ணிக்கை பலமும் அதிகரித்து விட்ட பலம் வாய்ந்த ஒரு குடும்பம்—தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி — எண்ணிக்கை குறைந்த மற்றக்குடும்பத்தைக் குலைத்துவிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

இதுதான் ஈழத்தில் பிரச்சினை தோன்றுவதற்கே அடிப்படைக் காரணம்!

இதனல்தான் பாதிக்கப்படும் தமிழ்க் குடும்பம், ஆதிக்கம் செலுத்த முனையும் சிங்களக் குடும்பத்துடன் தொடர்ந்தும் சச்சரவின்றி சமாதான சகவாழ்வு வாழ்வதற்காக இரண்டு குடும்பங்களுக்கிடையிலும் முன்பிருந்ததுபோல ஒரு வேலிபோட்டுவிடவேண்டுமென்று கேட்கிறது!

'வேலியாபோட நினைத்தாய் முட்டாளே! உன்னை தொலைத்துவிடுகிறேன் பார்' என்று ஆதிக்கத்திமிர் பிடித்த குடும்பம் சட்டமெனும் துணைகொண்டு கொடுவாளைத் தூக்குகிறது!

இதுதான் இலங்கைப் பிரச்சினை—இலங்கைத் தமிழர் பிரச்சினை! தமிழ் நாடு காங்கிரசின் புதிய தலைவர் மதிப்புக்குரிய மூப்பனர் அவர்கள் இதைப்புரிந்து கொண்டு, ஏனைய தனது சகாக்களுக்கும் இதை எடுத்துச் சொல்வாரென்று எதிர்பார்க்கிருேம்!

# "யூத மக்களுக்கு வழிகாட்டிய இறைவன் ஈழ மக்களுக்கும் வழிகாட்டுவார்!"

## அருட்திரு சிங்கராயர் அடிகள் பேச்சு!

'மீளா அடிமைத் தளைத் திற்கு ஆளாகி அடிமைத் துயரின் மடியில் அவதியுற்ற இஸ்ரவேல் மக்களை மோயிசன் மூலமாக மீட்டு, அவர்களுக்கென ஒரு நாட்டைக் காட்டி அன்று அழைத்துச் சென்ற இறைவன் ஈழத்தமிழர் இன்னல்களுக்கும் ஒரு விடிவைக் காட்டுவார்.

இவ்வாறு அண்மையில் இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்ற யாழ்—மறை மாவட்டக் கத்தோலிக்க உயர்தர மாணவர் சங்க இளவாலைப் பெரும் பிரிவின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. ஆ. சிங்கராயர் அ. ம. தி. அடிகள் குறிப்பிட்டனர்.

இக்கூட்டத்திற்கு காங்கேசன்துறை, உடுவில், வட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள கல்லூரிகளிலிருந்து வந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். இயக்குனர் அருட்திரு. ஆர். யோசவ் அவர்களின் ஆரம்பஉரையுடன் தொடங்கிய கூட்டத்தில் அடிகளார் தொடர்ந்து பேசும்போது ஈழத்தமிழ் இனம் எவ்வாறு ஒதுக்கப்பட்டு வருகின்றது என்பதை வரலாற்று வழியில் நின்று ஆராய்ந்து பின் வரும் உண்மைகளை எடுத்து வடித்தார்.

"உயர்தர வகுப்பு மாணவர்களாகிய உங்கள் கல்வியைத்தரப்படுத்தல்என்னும் சம்மட்டியால் அடித்து நொறுக்கி உங்கள் வருங்கால வளமான வாழ்வுக்கு குழிதோண்டிய இன்றைய அரசு வேலைவாய்ப்புக்களிலும் உங்களை உதாசீனம் செய்து வருகின்றது. உயர் பதவிகளில் பௌத்தர்கள் அமர்த்தப்படவேண்டுமெனும் கூச்சல்களை நாம் பத்திரிகைகளிற் படித்துவருகிருேம். சிங்களச் சிருர்களின் பிஞ்சு உள்ளங்களில் தமிழர்களைப்பற்றிய தவருன கருத்துக்கள் விதைக்கப் படுகின்றன. குற்றம் புரியாத தமிழ் இளைஞர்கள் கேட்பாரற்ற நிலையில் சிறைச்சாலைகளுள் வெந்துகொண்டிருப்பதை நினைந்தால் எந்தத் தமிழ் உள்ளம்தான் நொந்து வருந்தாது.

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களையிட்டு ஒரு விசாரணைக் குழுவை நியமித்து நீதியை நிலைநாட்டப் பின் நிற்கும் இன்றைய அரசாங்கம் கொலைகளும் கொள்ளைகளும் நடாத்திய மறுசிருவின் மரணத்தையிட்டு விசாரணைசெய்ய ஒரு குழுவை நியமித்திருப்பதைப் பார்க்கும்போது தமிழர்களுடைய உயிரையே அது அவமதிப்பதாகத்தெரிகிறது.

"மாநாட்டில் உயிரிழந்தவர்களுக்கு மக்கள் எழுப்பிய நினைவுச் சின்னத்தை ஆணவத்தால் உடைத்தெறிந்த அதிகாரபலம் இராக்காலத்தில் இவ்விழிசெயலைச் செய்து தன் கோழைத்தனத்தையும் காட்டிக்கொண்டது.

"ஒரு அரசியல்வாதி சுடப்பட்டதை அடுத்து, ஒன்றுமறியாத பல இளைஞர்கள் நகரகாவலாளர் சிலரின் திமிருக்கு ஆளாகிச் சிறையில் வாடவேண்டியதாயிற்று. ஆனல் 1971ம் ஆண்டு பல நகர காவலாளிகளின் உயிரைக் குடித்த பயங்கரவாதிகள்—ஜனதா விமுக்தி பெரமுனை சிங்கள வாலியர்—ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையில் சுதந்திரமாக வெளியேறுவதை நாம் அறிகிருேம்.

"தேயிலையை விருத்தி செய்து இலங்கையின் பொருளாதார வளத்துக்கு தன் இரத்தத்தையே எருவாக்கிய இந்தியத் தொழிலாளிகள் உண்ண உணவின்றி உறைய இடமற்று ஏங்கித் தவிக்கின்ருர்கள். அவர்களை அடக்கம் செய்யக்கூடச் சேமக்காலை கிடையாது. தேயிலைச் செடிகளின் அடிகளுக்கு உரமாக அவர்கள் மடிந்துபோகிருர்கள். திட்டமிட்ட குடியேற்றத்தால் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர் பெரும்பான்மை பலத்தை இழந்துவிடுகின்றனர்.

தமிழருடைய கூட்டுச் சேர்க்கையையும் ஒற்றுமையையும் மூடி மறைக்கவும் வெளியுலகுக்கு இலங்கைத் தமிழரின் அவலநிலையின் குரல் எட்டாதிருக்கவும் திரைமறைவில் கருமங்கள் நடைபெறுகின்றன. முகவரி தெரியாத சில சில்லறை இயக்கங்கள் தொடங்கியிருப்பதும் ஆட்சி செய்யும் சூழ்ச்சியோ எனச் சிந்திக்க வேண்டியிருக்கிறது என்று ஈழநாட்டிலிருந்து தமிழ்ப் பிரச்சினைகளை ஒவ்வொன்ருய் எடுத்து ஆராய்ந்தார்.

கிறிஸ்துவின் துணைகொண்டு உத்தமமான தலைவர்களை இளைஞர்கள் பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார், முகத்துவாரம் புனித அந்திரேசியார் ஆலயத்தில் தமிழர்களுக்கு நடந்தவை குறித்து அடிகளார் தமது கவலையைக் குறிப்பிடத் தயங்கவில்லை.

"நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பேறுபெற்ருேர் ஏனெனில் அவர்கள் விடுதலையின் ஒலியைச் சுவைப்பார்கள்" என்று தன் பேச்சை முடித்தார்.

மாணவர்கள் வினவிய வினுக்களுக்கு அடியார்கள் கூறிய விடைகள் எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்தன

# காசி ஆனந்தன் பிறந்த நாள் விழா

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பிறந்த தினமான 4-4-76 ஞாயிற்றுக்கிழமை பிறந்த நாள் விழாக்கொண்டாட்டமொன்றை மட்டக்களப்பில் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை ஏற்பாடுசெய்துள்ளது. மாநகர மண்டபத்தில் இளைஞர்பேரவைத் தலைவர் திரு. கா. அன்ரன் அவர்களின் தலைமையில் இடம்பெறவிருக்கும் பிறந்த நாள் விழா கொண்டாட்டத்தின்போது திருவாளர்கள் [illegible] இளையபதி பாலகு[illegible]ரன், சி. தியாகராசா, வ. ஆ. தங்கவேலாயுதம் ஆகியோரும் இன்னும் பலரும் பேசவிருக்கின்ருர்கள்; மற்றும் கவியரங்கம், இசையரங்கம், நாடகம் ஆகியன சிறப்பம்சங்களாக இடம் பெறவிருக்கின்றன.

தேனூடுமாமன்றத்தினர் தயாரித்தளிக்கும் 'புரட்சிப் பூக்கள்' வரலாற்று நாடகம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

மாலை 5 மணியிலிருந்து இரவு 10மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## தமிழர் கூட்டணி புங்குடு தீவு கிளை

தமிழர் கூட்டணியின் புங்குடுதீவுக்கிளை அமைப்புக் கூட்டம் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. தலைமையில் புங்குடு தீவு இளைஞர் கழக மண்டபத்தில் நடந்தபோது கிளைத் தலைவராக வே. க. சோமசுந்தரமும், செயலாளராக எஸ். கே. மகேந்திரனும், பொருளாளராக ஏ. பசுபதியும், உபதலைவராக வி. எஸ். நல்லையாவும், உபசெயலாளராக அ. சண்முகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். 12பேர்கொண்ட செயற் குழுவும் தெரிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழன் எங்கிருந்தாலும் ஒரே இனத்தவன்!"



## 'தமிழோசை' வெளியீட்டு விழாவில் நாவலர் அமிர்தலிங்கம் பேச்சு

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனும் உயர்ந்த இலட்சியத்தை வைத்து உலகெங்கும் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்துகின்றோம். ஆனால் எங்களது சொந்த இன உறவையும் சொந்தத்தையும் விட்டு விட்டு ஊரெல்லாம் உறவு கொண்டாட முடியாது. ஆண்ட பரம்பரை என்று பாடுகின்றோம்! உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனால் கூட ஆளும் பரம்பரை என்று பாட முடியவில்லை.

"என்று மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை வை. எம். சி. ஏ. மண்டபத்தில கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத் தலைவர் திரு. க. நவசோதி தலைமையில் நடைபெற்ற தமிழோசை தமிழாராய்ச்சி மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியீட்டையும் மன்றத்தின் மட்டக்களப்புக்கிளை ஆரம்பத்தையும் ஒட்டி நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் நாவலர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

முன்னைநாள் மூதவை உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களும் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். திரு. மாணிக்கம் அவர்கள் தமிழோசை மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் கலைஞர் கருணாநிதி அண்ணாவுடன் இணைந்து தான் பிறந்த நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயர் சூட்டிக் கொடுத்தார் என்று குறிப்பிட்டார்.

கலைஞர் கருணாநிதிப் பொதுப்பணி மன்றத் தலைவர் திரு. க. நவசோதி தமது தலைமையுரையில் "மட்டக்களப்புத் தேனாடு ஈன்றபெருங்கவிஞனை அரசு கூட்டுக்குள்ளிருக்கும் குயில் போல் அடைத்து வைத்து விட்டு தமிழராய்ச்சி மாநாடு நடத்துவது தமிழினத்தின் சாபக்கேடாகும். "ஆண்ட பரம்பரை" என்று பாடி ஊரெங்கும் எழுச்சியை ஏற்படுத்திய அந்தக் குயிற்பாட்டு நிச்சயம் மறுமலர்ச்சியை உண்டாக்கும். யாழ்ப்பாணத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஆராய்ச்சியாளர்கள் ஆண்ட பரம்பரை பற்றி ஆராய்ச்சி நடாத்தி நின்றபோது ஆண்ட பரம்பரைக்குரிய ஆள்வேந்தர்களாக எல்லாளனும், சங்கிலியனும், பாராண்ட பண்டார வ[illegible]யனும் "அலங்காரக்[illegible]துடன் பவனி வந்ததை[illegible] கண்டோம். ஆனால் மட்[illegible]களப்பிலே மாநாடு நடை[illegible] பெறுகிறது, தமிழன் ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவன் என்று எடுத்துக்காட்ட எதுவுமே காணப்படவில்லை. ஆட்சியாளரின் அடிவருடிகள் பற்றி அழகான காட்சிகளைத்தான் காண்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் மேலும் தமது சிறப்புரையில், "உலகிலே நாம் தமிழர் என்ற உணர்வை ஏற்படுத்தியது அண்ணாவின் ஆட்சிதான். மதராஸ் மாநிலத்தை தமிழ் நாடு என மாற்றியதும் அண்ணாவின் ஆட்சிதான்; உலகத் தமிழினத்தின் ஒற்றுமையின் சின்னம் அண்ணா; உலகிலே தமிழன் எங்கிருந்[illegible]தாலும் ஒரே இனத்[illegible]. பாரம்பரியம் ஒன்றுதான். மூவேந்தர் விட்டுச்சென்ற சொத்தின் சொந்தக்காரர் நாம். தமிழினத்திற்கு எங்கு பார்த்தாலும் அடிமை நிலை இந்த நிலையைப் போக்கும் உணர்ச்சி எழவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள்: க. துரைரத்தினம் பா. உ., ஈழவேந்தன், ம. சு: சாம்பசிவம், எஸ். பி. பாண்டியன், பாரதிதாசன், பேராதனை நா. சுப்பிரமணியம், ச. இரத்தினசிங்கம், இ: பேரின்பநாயகம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் தமிழுணர்ச்சிப் பாடல்களைப் பாடினார்.

"தமிழோசை" தமிழாராய்ச்சி மாநாட்டுச் சிறப்பிதழின் முதற் பிரதியை திரு. மாணிக்கம் அவர்களிடமிருந்து நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார். கூட்டத்திற்கு வருகை தந்திருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் தந்தை அவர்களுக்கும் தமிழோசை பிரதி அன்பளிப்பு செய்யப்பட்டது.

## இ.தொ.கழக பொதுச்செயலாளர் வாழ்த்து!

"மூதறிஞர் செல்வா அவர்களின் 79வது பிறந்த நாளில் அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் மக்களை வழி நடத்திச்செல்ல வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மலைநாட்டுத் தமிழ் மக்களின் அரசியலுரிமைகள் பறிக்கப்பட்டதை எதிர்த்துப்போராடியவர் தந்தை செல்வா. அன்று அவர் நாடாளுமன்றத்திலே கூறிய தீர்க்க தரிசனம் இன்று உண்மையாகி விட்டது. இன்று ஈழத்தமிழ் பேசும் மக்கள் அனைவரும்—பிரதேச வேறுபாடின்றி—மதவேறுபாடின்றி — சாதி வேறுபாடின்றி—கட்சிவேறுபாடின்றி ஏற்றுக்கொண்டிருக்கும் ஒரே தலைவர் தந்தை செல்வா அவர்களே. அவர் நீடூழி வாழ்க!"

—இவ்வாறு மூதறிஞர் செல்வாவின் பிறந்த நாளை முன்னிட்டு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. மு. பராசசிங்கம் வெளியிட்டிருந்த வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



# விசரோ விசர்!

பதவி விசர், அதிகார விசர், அடிமை விசர் என்னும் பலவித விசர் பிடித்து வெறித்தனமாக இளைஞர்களை கண்டபடி அடித்தும் கடித்தும் வந்த ஒரு 'பிள்ளை'க்கு அண்மையில் உண்மையிலேயே ஒரு விசர் நாய் கடித்துவிட்டதாம்.

கடி வாங்கிய 'பிள்ளை'யும் தன்னினத்தைச் சேர்ந்தவர் என்று கருதியோ என்னவோ நாலு கால் விசர் நாயும் துணிந்து 'பிள்ளை'க்கு வாய் வைத்துவிட்டதாம்!

நாலாம் இலக்கத்துக்கும் விசர் நாயிடம் கடி வாங்கிய 'பிள்ளை'க்கும் நெருங்கிய தொடர்பு உண்டாம்!

யாழ்ப்பாணப் பகுதியில் இந்தப் பிள்ளையின் பெயரைச் சொன்னால், அழுத பிள்ளையும் வாய் மூடுமாம்!

அவ்வளவு கிலியாம் அதன் பேரைக் கேட்டால்!

'பிள்ளை' இருந்த வீட்டில், மற்றோர் நாயும் இருந்து வந்ததாம்!

வீட்டிலிருந்த இந்த நாய்க்கு வெளியேயிருந்து வந்தவேறோர் விசர் நாய் கடிக்க, விசர் நாயிடம் கடி வாங்கிய வீட்டு நாய் தமது எசமானப்பிள்ளைக்கு வாயினால் 'தீட்சை'வைத்ததாம்.

இதனால் தனக்கும் விசர் வந்து விடுமோ என்று அஞ்சிய எசமான் 'பிள்ளை' அண்மையில் இதற்காக வைத்திய சிகிச்சையும் செய்து கொண்டதாம்!

எனினும் பிள்ளையின் 'விசர்' இதனால் இன்னும் அதிகரிக்கக்கூடுமோ என்று இளைஞர்கள் அஞ்சுகின்றனர்.

ஏப்ரல் முட்டாள் தினமாகிய ஏப்ரல் முதல் நாள் நமக்கு கிடைத்த செய்தி இது, [illegible] அல்ல உண்மையில் நடந்ததாகும்!

### திருமண நன்றி நவிலல்.

25—3—76 வியாழக்கிழமை பகல் சுன்னாகம் மயிலணியில் நடைபெற்ற எமது திருமணத்தின் போதும், அன்று பிற்பகல் நீர்வேலியில் நடைபெற்ற வரவேற்புபசாரத்தின் போதும் நேரில் வந்து வாழ்த்தியும், பரிசுப் பொருட்கள் அளித்தும், வாழ்த்துத் தந்திகள் அனுப்பியும் எம்மைக் கௌரவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

கே. கே. ரி. சர்மா, —கௌரிவல்லி தம்பதிகள்
(சிறீகதிரேசன் கோவில் மாவனல்லை)

### சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு—
  (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12


### வாழ்க்கையில் திருமுறைகள்.

15 மில்க்வைற் நீல சோப் அல்லது
2 பார் சோப் அல்லது
2 நீம் வாசனை சோப் அல்லது
2 மில்க்வைற் சலவைப் பவுடர்

மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சட்டமறுப்பு இயக்கம் தமிழ் ஈழம் முழுவதும் ஒரே சமயத்தில் பரவலாக நடைபெறும்!"

## கிரான் கருத்தரங்கில் உடுவில் பா. உ. தர்மலிங்கம் அறிவிப்பு!

"காந்தியடிகள், இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது உப்புச்சத்தியாக்கிரகத்தை ஒரு சட்டமறுப்பாகவே செய்தார். சட்டம் மீறப்படுவதை பார்த்துக்கொட்டு, ஆங்கிலேய ஏகாதிபத்தியம் பேசாமல் இருக்கவில்லை. காந்தியடிகள் மீதும் ஏனைய தொண்டர்கள் மீதும் நடவடிக்கையெடுத்தது. ஆனால் தமிழர் கூட்டணியினராகிய நாங்கள் இங்கு சட்டத்தை முறித்து சத்தியாக்கிரகத்திலீடுபடும்போது, அதைக் கண்டும் காணாததுபோல் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் அரசு தட்டிக் கழித்து வருகிறது. இளைஞர்களை மட்டும் காரணமின்றிகைது செய்து விசாரணையின்றி சிறையிலடைத்துவைத்திருக்கிறது. காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைப் பரவலாக நடத்தியது போலவே, நாமும் இனி எமது சட்டமறுப்பு இயக்கங்களை தமிழ்ஈழம்முழுவதும் ஒரே சமயத்தில்பரவலாகவும் தொடர்ச்சியாகவும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். மே 14, 15, 16ம் திகதிகளில் திருகோணமலையில் கூடும் எமது சிறப்புமாநாட்டின்போது சட்டமறுப்புஇயக்கத்தின் முதலாவது நடவடிக்கையும், அது தொடங்கும் திகதியும் அறிவிக்கப்படும்!"


இவ்வாறுகிரான்குளத்தில் 21.3.76ல் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய உடுவில் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார். திரு. நாகராசா அவர்களின் வளவில் நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை தலைமை வகித்தார்.

தலைவர் தமது உரையில், பெரிய கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து தமிழர் கூட்டணியின் கொள்கைகளை மக்களுக்கு எடுத்து விளங்கப்படுத்தவேண்டுமென்றும், இன்றைய இளைஞர்களுக்கு கடந்த காலத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் பற்றிய வரலாறு எடுத்துரைக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. பூ. கணேசலிங்கம் பேசுகையில், தமிழ் இளைஞர்கள் கட்டுப்பாடின்றித் தாமாகவே போராட்டங்களை தொடங்கிவிடக்கூடாதென்றும், தலைவர்களின் பின்னால் இளைஞர்கள் அணிதிரள வேண்டுமென்றும், போராட்டத்தில் தொண்டர்களை முன் செல்லவிட்டு தலைவர்கள் பின் செல்ல மாட்டார்கள் என்றும் தலைவர்களே போராட்டத்தை நடத்துவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம், ஈழவேந்தன் ஆகியோர் பேசிய பின்னர் கிரான்குளம் தமிழ் இளைஞர் பேரவை கிளைத்தலைவர் திரு. சண்முகராசா நன்றி கூறினார். முடிவில் பின்வருவோரைக் கொண்ட தமிழ் இளைஞர் பேரவைக் கிளை அமைக்கப்பட்டது.

தலைவர்: த. சண்முகராசா
துணைத்தலைவர்: பூ. தேவராசா, இணைச்செயலாளர்கள் த. கனகசிங்கம், த. வைகுந்தராசா, பொருளாளர் மு. பேரின்பம், செயற்குழு உறுப்பினர்கள் — ச. அரசரெத்தினம், க. பஞ்சாட்சரலிங்கம், மா. பாக்கியராசா, தி. மூர்த்தி, க. விமலநாதன், இ. அருளானந்தம், த. தெய்வநாயகம்.



கருத்தரங்கும் முன்னால் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 'தமிழ்ஈழப்பொருளாதார வளம்' குறித்து திரு. சே. மா. செல்லத்தம்புவும். 'தமிழ் ஈழ வரலாற்றுக் குறிப்புக்கள்' பற்றி திரு. ஈழவேந்தனும், 'இளைஞர் பேரவை அமைப்பு முறை' பற்றி ஆ. இரகுபதிபாலசிறீதரனும், இளைஞர்கள் இயங்கவேண்டிய முறை பற்றி செயலாளர்நாயகம் அ. அமிர்தலிங்கமும் கருத்து விளக்கம் அளித்தனர். மற்றும் திருமதி ம. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, பொ. கணேசலிங்கம் ஆகியோரும் பேசிய பின்னர், அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் பேரவைகளின் மத்திய குழு தெரிவு செய்யப்பட்டது.

இதன் தலைவராக இரா. மதுரநாயகமும் (பெரிய கல்லாறு), துணைத்தலைவராக ச. மகேஸ்வரனும் (பாண்டிருப்பு), செயலாளராக பொன் கோபாலனும் (தம்பிலுவில்), துணைச் செயலாளராக ச. நல்லதம்பியும் (பொத்துவில்) பொருளாளராக பொன் வேணுதாசும் (மட்டுநகர்) தெரிவுசெய்யப்பட்டனர்:

செயற்குழு உறுப்பினர்கள் விபரம் வருமாறு:— ப. கிருஷ்ணன் (பொத்துவில்), ஆ. தண்டாயுதபாணி (கோமாரி), சீ. சதாசிவம் (அக்கரைப்பற்று), வி. கமலநாதன் (காரைதீவு), கு. விஜயநாதன் (பாண்டிருப்பு) இ. கந்தசாமி (பழுகாமம்), ச. நவரட்னராசா (குருக்கள் மடம்), இ. கோபாலபிள்ளை (முனைக்காடு), சா. இராமநாதன் (குறுமண்வெளி), செ. ஞானராஜ் (கோட்டைக்கல்லாறு), சி. மகேந்திரன் (மண்டூர்);

## அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட தமிழ்இளைஞர்பேரவை மத்திய குழு!

அம்பாறை - மட்டக்களப்பு தமிழ் இளைஞர்பேரவை மத்திய குழுத் தெரிவும்,



# குறள் கூறும் தமிழ் வீரம்!

—கலைஞர் கருணாநிதி

வேலும் வாளும் உண்டாக்கிய குருதிக் கடலில் பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும் வீரர்களின் தலைகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும், அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரிபடாமல் முதுகு காட்டாமல், "முன்னேறு நீ! முன்னேறு நீ!" என முரசொலித்து எஞ்சிய வீரர்கள் நெஞ்சுரம் கொள்ளச் செய்து எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ? எதிரியின் கணை பாயுமோ? என்று சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை எனும் போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்து விடாமல்—மரணம், மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு; மங்கையின் இதழைவிடச் சுவையானது என்று மனவலிமையோடு படையை நடத்திச் செல்பவனே மாவீரன்; மறவர் படைத் தலைவன் எனும் பாசறைக் காவியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்தவன்தான் அவன்.

அவன் தலைமையில் அணிவகுத்தது நால்வகைச் சேனை.

தலைநகரை முற்றுகையிட்ட பகைவர் படை, கோட்டைக்குள் நுழைந்திடவும், கொடிமரத்தை வீழ்த்திடவும், பரபரப்புக் காட்டியது.

சூழ்ந்து வந்த பகையைச் சுக்கு நூறாக்குவதிலேதான், தங்கள் நாட்டின் எதிர்கால நல்வாழ்வே இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட படைத் தலைவன் அணிவகுத்த வீரர்களுக்கு மத்தியில் போர் முழக்கம் செய்தான்:

"காளைநிகர்த்த வீரக்கண்மணிகளாள்!
வீரனுக்கு அழகு என்ன தெரியுமா?
தன் வாழ்நாளில்; கழிந்து போன
நாட்களில்;
எல்லா நாட்களும் நாட்கள் அல்ல!
வேறு எந்த நாள் அவனுக்குரிய நாள்?
அவன் விரும்பும் பொன்னாள் எது?
இதோ! வள்ளுவர் கூறுகிறார்;
கேளுங்கள்:

விழுப்புண்படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து

(பொருட்பால்-படைச்செருக்கு-776)

போர்க்களம் சென்று அவன் உடலில் விழுப்புண் ஏற்காத நாட்கள் எல்லாம் பயன்படாத நாட்களேயாகும் என்பது வள்ளுவரின் வீர வரிகளன்றோ!

அதையுணர்ந்துள்ள என் ஆருயிர் வீரர்களே!

ஆறிலும் சாவுதான்; நூறிலும் சாவுதான்; ஆனது ஆகட்டுமே என்று போர்க்குரல் கொடுங்கள்! அதோ! நமது பகைவன்! விழுப்புண்களை விலையாகக் கொடுத்து வெற்றிக் கனியை பெற்றிடுவோம் வாரீர்! நம், கோட்டை மதிலைச் சுற்றிப் பார்க்கிறது, எதிரியின் கொடித்தேர்! அதனை உடைத்துப் பிளந்து அகழியில் வீசுவோம் புறப்படுவீர்! அதோ! அதோ! அவை விண்வெளியின் அடித்தளத்து மின்னல்களல்ல; பகைவர் படையின் வாள் ஒளி!

உங்கள் விழிகள் பகைவர்களை நோக்கிக் கோபம் கொப்பளிக்கத்திறக்கட்டும். ஆனால் ஒன்று; மறந்துவிடாதீர்கள்: பகைவரைச் சினந்துநோக்கிய கண்களுக்குரிய இலக்கணத்தை வள்ளுவன் வகுத்திருக்கும் சிறப்பினை மறந்து விடாதீர்கள்! பகைவரை நோக்கிச் சீற்றமுடன் திறந்த விழிகள், பகைவர் எறியும் வேலைப் பார்த்திடும்போது மூடி இமைக்குமானால் அது வீரர்களுக்கு ஏற்பட்ட தோல்வியையே காட்டுவதாகும்.

"விழித்தகண் வேல் கொண்டெறிய
அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவீர்க்கு."

(பொருட்பால்-படைச்செருக்கு-775)

வேலின் பாய்ச்சல் கண்டு விழி இமைப்பதும் கோழைத்தனம் என்று கூறுகின்றார் குறளார்!

அந்தக் குறளை ஒலித்திடுக! முரசை முழக்கிடுக! தேள்போல் திரளும் பகையைத் தூள் தூளாக்குக!

போர் தொடங்குகிறது—

இந்த வீரமிகு காட்சிக்கேற்ற இரண்டு குறள்களைத்தான் நாம் மறக்க இயலுமோ?

—நன்றி: தி. கதிர்.

## 'கலப்பு' வளா..

—7-ம பக்கத் தொடர்

என்பது தமிழ்ப் பழமொழி. ஒற்றுமை அல்லது கூட்டு முயற்சிதரும்ஆக்கம், பெருக்கம், வளம், பொலிவு ஆகியவற்றின் உயர்வுகளை இப்பழமொழி எடுத்துக்காட்டுகின்றது. தனிமரம் புயலிலே சாய்ந்துவிடும்: ஆனால் தோப்பிலேயுள்ள பல மரங்களின் செறிவு புயலை எதிர்த்து நிற்கும் உறுதியைக் கொடுக்கின்றது. ஏனெனில், தோப்பின் ஒவ்வொரு மரத்துக்கும் தோப்பினுடைய அத்தனை மரங்களின் கூட்டுறவும் உரியதாகிவிடுகின்றது. கூட்டுமுயற்சியால் ஏற்படும் இயல்பான பயன் இது. இம்மகாநாடும் கூட்டு முயற்சியினாலேயே சிறப்பாக அமைகின்றது.

மட்டக்களப்பிலே இத்தகையதொரு மகாநாடு மொழிக்கென நடைபெறுவது இதுவே முதல் தடவை. இம்மாநாட்டின் வெற்றியைப் பலர் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அதற்கு உங்கள் யாவரதும் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

## சிறையிருக்கும்...

—2-ம் பக்கத் தொடர்

பதா? எப்படி அழைப்பது என்று அறியாது மக்கள் விடைபெற்றனர். பூத்தென்றலாய் கமழ்ந்து கொண்டிருந்த புத்துலக சிற்பியை காசியை கண்டேன். கண்டறியாதன எல்லாம் அவரிடம் கண்டேன்.

அத்தகைய கவிஞன் மீண்டும் இப்போது சிறைக்குள் வாடுகிறான்! பாடித்திரிந்த குயில் மீண்டும் கடந்த 8 மாதங்களாக சிறைக்குள் வாடுகிறது! அது மீண்டும் வெளியே வந்து கான மிசைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போம்! காசி ஆனந்தன் வாழ்க!

## அக்கரைப்பற்றில் தமிழ் மகளிர் பேரவை

அக்கரைப்பற்றில் தமிழ் மகளிர் பேரவையின் கிளையொன்று சென்ற 20-3-76ல் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களி

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கலப்பு’ வளாகம் கிழக்கில் அமையுமானால்

# அது கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்ட கதையாகிவிடும்!

தமிழ் பேசும் மக்கள் பல நூற்றுண்டுகளாக வாழ்ந்து வரும் ஈழத் திருநாட்டிலே, சீரார் கீழ்த்திசையைச் சேர்ந்து, செந்நெல்லின் இன்சுவைத் தீங்கன்னலொடு தெங்கின் இளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும் தேனின் இன்சுவையும் எங்கும் குறையாதியலும் மட்டுமாநகரிலே, கவிதையிற் பேசி. கவிதையில் வளர்ந்து, கவிதையிலே வாழும் பெருமக்கள் மத்தியிலே, தமிழ் ஆராய்ச்சி நடத்த வந்துள்ள பேரறிஞர்களையும், பார்வையாளர்களையும் பேருரைகளைக் கேட்கக் குழுமியுள்ள பொது மக்களையும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் சார்பிலே வரவேற்பதிற் பெருமையடைகின்றேன்.

தொடங்குவதற்கு முன்னரும் முடிந்த பின்னரும் உலகப் பிரசித்தி பெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் பின் ஈராண்டு கழிந்து, மட்டக்களப்பில் மகாநாடு நடத்துகின்றோம். அந்த நான்காவது மகாநாடு இதுவரை எந்த அரசியற் கட்சியோ, அரசியற் சக்தியோ, மக்கள் இயக்கமோ உண்டாக்காத தமிழ் உணர்ச்சியை, தமிழ் எழுச்சியை, ஏற்படுத்தியதென்பதனை யாவரும் ஏற்றுக்கொள்வர். இதற்குக் காரணம் பொது மக்கள் மகாநாட்டிற்கு அளித்த ஒத்துழைப்பும் ஒத்தாசையுமே. அத்தகைய ஓர் எழுச்சியையும் ஒத்துழைப்பையும் இவ்வாராய்ச்சி மகாநாடும் ஏற்படுத்துமென்ற நம்பிக்கை எமக்குண்டு.

## மட்டுநகரின் பெருமை

இவ்வாராய்ச்சி மகாநாடு இங்கு நடைபெறுவதற்கேற்ற தகுதியும் உரிமையும் மட்டக்களப்புக்கு உண்டு. மட்டக்களப்பு என்னும் போது நாம் தமிழ்ப்பிரதேசமாகிய அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியே பேசுகிறோம். மட்டக்களப்பு வீரம் படைத்த தமிழ் நிலம். அதற்கு கவித்திறன் உண்டு; கலை வளம் உண்டு; பொருள் வளமுண்டு. ஈழம் முழுவதற்கும் தேவையான நெல்லை அளிக்கக்கூடிய வளம் இங்குண்டு. மரபு வழிவந்த கலைகள் நிறைய உண்டு. யாரோடும் தலைநிமிர்ந்து நிற்கும் ஆற்றலுமுண்டு.

மட்டக்களப்பு கண்ணகி வழக்குரைக்கும் கொம்பு விளையாட்டிற்கும் பெயர் பெற்றது. கண்ணகி பிறந்தது பூம்புகாரைத் தலைநகராகக் கொண்ட சோழ மண்டலத்தில்; அவள் அரசியற் புரட்சி செய்து கொடுங்கோலாட்சியை அழித்தது பாண்டிய மண்டலத்திலே; அவள் தெய்வீகத்தன்மையடைந்து கோயிலிற் குடிகொண்டது சேரமண்டலத்திலே. ஆனால்; சோழ, பாண்டிய, சேர மண்டலங்களைத் தன்னகத்தேகொண்டதமிழகத்திலே கண்ணகி கோயில் ஒன்றேனும் இல்லை. “மாரியம்மன்” என்ற வேறு பெயராலேயே அங்கு கண்ணகிக்குக் கோயில்கள் அமைந்திருக்கின்றன.

## அநீதி செய்யும் அரசு அழிக்கப்பட வேண்டும்

ஆனல், ஈழமண்டலத்திலோ, பல கண்ணகி அம்மன் கோயில்கள் அமைந்திருக்கின்றன. அதுவும், மட்டக்களப்புப் பிரதேசத்திலே ஒவ்வோர் ஊரிலும் கண்ணகி அம்மன் கோவிலுண்டு. இக்கோயில்களிற் படிக்கப்படும் காவியமே, கண்ணகி வழக்குரை; யாழ்ப்பாணத்திலே இக்காவியம் கோவலன் கதை எனவே வழங்கப்படும். கண்ணகியின் வழக்குரை தேரா மன்னனுக்குத் தெரிவித்த அறிவுரை யாது? கோவலன் கொலை தனி மனிதனின் கொலையன்று; அது இனக்கொலை. தனி மனிதனை விசாரியாது தண்டிக்கும் எந்த அரசும் வேரோடு அழிக்கப்பட வேண்டும்.

இந்தஅரசியல்ஞானத்தை மட்டக்களப்பு மக்கள் வோர் ஆண்டும் வைகாசி விசாகத்தில் உலகிற்கு போதிக்கின்றனர். இத்தகைய தன்மானக் கொள்கையுடைய மக்களின் தலைநகரிலே ஆராய்ச்சி மாநாடு நடைபெறுவது பொருத்தமானது; ஏற்றமானது என்பதை உண்மைத் தமிழ் உணர்ச்சியுள்ள எவரும், மட்டக்களப்புத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்தையும் தமிழ்த்தொண்டையும் அறிந்த எவரும் மறுக்கமுடியாது.

## மட்டக்களப்பின் தமிழ்த்தொண்டு

மட்டக்களப்புத் தமிழகத்து மக்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு மிகப் பெரியது. உணர்ச்சிக் கவிநலம் நிறைந்த நாட்டுப் பாடல்கள், மக்கள் வளர்த்த நாட்டுக் கூத்துக்கள், குரவைப்பாடல்கள், கண்ணகி வழக்குரைகள், குளுத்திப் பாடல்கள், கொம்பு விளையாட்டுப் பாடல்கள், வசந்தன், பாடல்கள் போன்றவை ஆற்றல் படைத்த உணர்ச்சிக்கவிகளாக விளங்குகின்றன.

இத்தகைய இயற்கைக் கவிவளம் படைத்த மட்டக்களப்பிலே பல புலவர் தோன்றி, தமிழ் வளத்தைப் பெருக்கியுள்ளனர். வித்துவான் ச. பூபாலபிள்ளை, அ. சரவணமுத்தன், குமாரசுவாமி ஐயர், பண்டிதர் குஞ்சித்தம்பி, வித்துவான் சைவத்திலிங்க தேசிகர், புலவர் விஜசித்தம்பி, உயர்திரு விபுலானந்த அடிகள், புலவர்மணி பெரியத்தம்பிப் பிள்ளை முதலியோர் பெரும் புலவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

சோமசுந்தர தேசிகர், உவில்லியம் பிள்ளை, வேதநாயகம் போதகர், கணபதிப்பிள்ளைப் புலவர், சின்னவப் புலவர், க. அருணாசல தேசிகமணி, சோமசுந்தர உபதேசியார், பண்டிதர் பூபாலபிள்ளை, பண்டிதர் சபாபதிப்பிள்ளை போன்றோர் தமது கவிதைகளினாலே தன்மதிப்புப் பெற்றவர்கள்.

மட்டக்களப்பிலே தமிழ் வளத்தைப்பெருக்கியவருட் பல முஸ்லிம்களும் உளர். மருதமுனை சின்ன ஆலிம் அப்பா, அக்கரைப்பற்று ஹாஷிம் ஆலிம் புலவர் போன்றவர் பலர் புலமையுடன் திகழ்ந்திருக்கின்றனர். காத்தான்குடியைச்சேர்ந்த அப்துல் காதர் லெப்பை அவர்கள் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற சிறந்த கவிஞராவர்,

தமிழகப் பல்கலைக் கழக முதற்றமிழ்ப் பேராசிரியர், பாரதி பாடல்களின் சிறப்பினை முதன் முதலிலே தமிழ்



# மட்டக்களப்பு மாநாட்டில் வித்தியானந்தன் எச்சரிக்கை!

## தமிழ் பேசும் இனம் பலமடைய தமிழ், முஸ்லிம் உறவு வளரட்டும்!

கூறும் நல்லுலகிற்கு அறிமுகப்படுத்திய பெருந்தகை, முதற்றமிழ்க் கலைச் சொல்லாக்க மகாநாட்டுத் தலைவர், பிரபுத்த பாரதம் என்னும் சமய ஆங்கிலச் சஞ்சிகையின் ஆசிரியருள், முதன் முதலாக தமிழருள் நியமிக்கப்பட்ட பெருமைக்குரியவர், ஈழத்தின் முத்தமிழ் மதுரைப் பண்டிதர் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதற்றமிழ்ப் பேராசிரியர், என்று பல வகையில் முதன்மை பெற்ற விபுலானந்த அடிகள் இயற்றிய நூல்களில் யாழ்நூலும் மதங்க சூளாமணியும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. இவர் பாடிய கவிதைகளும் எழுதிய கட்டுரைகளும் எண்ணில் அடங்கா.

## தமிழ் ஆராய்ச்சி

இச்சந்தர்ப்பத்தில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பணிகள் பற்றியும் நோக்குதல் அவசியமாகின்றது. 12 ஆண்டுகளுக்கு முன் 1964ம் ஆண்டு சனவரி மாதம் 7ம் நாள் நிறுவப்பட்ட அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் ஆற்றிய பணியின் பயனாகத் தமிழ் இலக்கியம் பற்றியும் பண்பாட்டு வளர்ச்சி பற்றியும், மொழியியல் பற்றியும் பல ஆராய்ச்சிகளின் முடிவுகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. உலகில் உள்ள தமிழ் அறிஞரை ஒன்று சேர்த்தும், அவர்களைக்கருத்துப் பரிமாறச் செய்தும், அவர்களின் ஆராய்ச்சிகளை வெளியிட்டும் வந்திருக்கின்றது; மேலும், இம்மன்றத்தின் முயற்சியால் இன்று பிறநாடுகளிற் பல பல்கலைக் கழகங்களிலே தமிழை ஒரு பாடமாகப் படிப்பிக்கின்றார்கள். அப்பல்கலைக்கழகங்களிலே தமிழ் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

1966ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற முதலாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஒட்டி இலங்கைக் கிளை நிறுவப்பட்டது. இக்கிளையின் உறுப்பினர் பலர் முதல் மூன்று மாநாடுகளிலும் கலந்துகொண்டனர். பிறநாடுகளில் இருந்துவரும் பேரறிஞர்கள் இலங்கைக் கிளை மன்றத்துக்கு வருகை தந்து சொற்பொழிவாற்றினர். 1974ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நான்காவது மகாநாட்டையாழ்ப்பாணத்திலே நடத்தியது. இலங்கைக்கிளையே. பிறநாட்டு அறிஞர்களும் கலந்துகொண்ட அம்மாநாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## முதலாவது மாநில மாநாடு

மலேசியா, இந்தியா, பாரிசு முதலிய நாடுகளில் நிறுவப்பட்ட கிளை மன்றங்கள் மகாநாடுகள் நடைபெற்றுமுடிந்ததும் மடிந்துவிட்டன. இலங்கைக் கிளை ஒன்றே உயிர்த்துடிப்புடன் இயங்குகின்றது. தமிழர் வாழும் பிரதேசங்களிலே தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடக்கவேண்டுமென்றும், அம்மகாநாடுகளில் அவ்வப் பிரதேசங்களுடன் தொடர்பான கட்டுரைகளே படிக்கப்படவேண்டுமென்றும், இலங்கைக்கிளை மன்றம் கொண்ட முடிவுக்கு அமையவே மட்டக்களப்பில் முதலாவது தேசிய தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுகின்றது,

## கறையான் புற்றெடுக்க...

ஆயினும், கிழக்கிலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்றிருந்திருந்தால் இம்மகாநாட்டினை எவ்வளவோ சிறப்பாக அங்கு நடத்தியிருக்கலாம். கிழக்கிலங்கைக்குப் பல்கலைக்கழக வளாகம் உடனடியாக வேண்டப்படும் அவசியத்தை இம்மகாநாடு வெட்டவெளிச்சமாகக் காட்டுகின்றது. பல்கலைக்கழக வளாகத்திலேயே இத்தகைய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்யக்கூடியதாக விருக்கும். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே மகாநாடு நடைபெற்ற பொழுது, வடக்கிலும், கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் அமைக்கவேண்டுமென வற்புறுத்தினோம். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வளாகம் அமைத்தார்கள். அதேபோல இம்மகாநாடு முடிவடைந்ததும் கிழக்கிலங்கையில் பல்கலைக் கழக வளாகம் நிறுவுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். ஆனல் இவ்வளாகம் கலப்பு வளாகமாக அமையக்கூடாது. அமையுமாயின் கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்த கதையாகும்.

## முஸ்லிம்—தமிழர் ஒற்றுமை

இம்மகாநாடு இன்னொரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. றது. பாணந்துறை கொழும்பு, புத்தளம், காத்தான்குடி, கல்முனை, மூதூர் யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து பல முஸ்லிம்கள் பேச்சாளராகவும், பார்வையாளராகவும், கலந்துகொள்கின்றனர். அவர்கள் சமர்ப்பித்த கட்டுரைகளிலிருந்து ஈழத்துமுஸ்லிம்களின் ஆத்மீகக் கலாச்சார வளர்ச்சிக்கு அடிகோலிக் கொடுப்பது தமிழே என்றும், அவர்கள் சாவிற்றமிழ் படித்தே சாவார் என்றும், செத்த பிறகும் தமிழிலேயே ஒப்பாரி பாடப்படுமென்றும் அறியக்கிடக்கின்றது.

முஸ்லிம்களும், தமிழர்களும் தமிழ்த்தாயின் பேதமற்ற அன்புக்குரிய இரு குழந்தைகள் என்பதனை இம்மாநாடு காட்டுகின்றது. தமிழ்பேசும் இனத்தின் நன்மைக்கும், தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கும் தமிழரும், முஸ்லிம்களும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற உணர்வு வலுப்பெற்று வரும் இக்கால கட்டத்திலே, மட்டக்களப்பிலே இம்மாநாடு நடைபெறுவதை யாவரும் வரவேற்பர்.

## முதலாவது மொழி மாநாடு

‘ஒருமரம் தோப்பல்ல; ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல

—6ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுவிடுவென்று...

—1-ம் பக்கத் தொடர்

மையை" கட்டியெழுப்பு வதற்கு முதற்படியாகவே தமிழ் மக்களின் உரிமைக் கிளர்ச்சியை நசுக்கும் சட்டங்கள் கொண்டு வரப்பட விருக்கின்றனவாம்!

சிங்களம் மட்டும், பௌத்தம் மட்டும் என்பனவற்றுக்கு எதிராகப் பேசுவதோ இயக்கம் நடத்துவதோ கூட சட்டவிரோதமானவையாக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வரவிருக்கும் புதிய சட்டங்களின்படி, தமிழன் இந் நாட்டில் மூச்சுவிட்டால் கூட, அவன் நாட்டுப் பிரிவினை கோருவதாகக்கூறி சிறைக்குள் தள்ளக்கூடியதாக பயங்கரமான சூழ்நிலை ஏற்படலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவரப்படுவது பற்றி தமிழர் கூட்டணித் தலைவர் ஒருவரிடம் கருத்துக் கேட்டபோது அவர் பின் வருமாறு கூறினார்:—

"தமிழ் மக்களின் ஒன்றுபட்ட உரிமைக்கிளர்ச்சியை

## தமிழர் பிரச்சினை...

—1-ம் பக்கத் தொடர்

உறவு, உடன்பாடு இருக்கிறது; ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டைப் பிரித்து தமிழர்களிடம் கொடுத்துவிடும்; நாம் தான் தமிழர் கூட்டணியை சந்திக்கச் சரியான ஆட்கள்; நாம் ஆட்சிக்கு வந்தால் பிரிவினை சக்திகளை நசுக்கியெறி

எத்தகைய கொடூர சட்டத்தைப் போட்டும் அடக்கிவிட முடியாது. 1956ம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் இந் நாட்டில் எத்தனையோ போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறார்கள். எத்தனையோ பயங்கரமான அடக்கு முறைகளையும், துன்பங்களையும் அவர்கள் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒருபோதும் களைத்து சோர்ந்து போய் உட்கார்ந்துவிடவில்லை, தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். குதிரையை கட்டியிழுத்து வேண்டுமானால் குளக் கரைக்கு கொண்டு செல்லலாம்; ஆனால் அதைக் கொண்டு தண்ணீர் குடிக்க வைத்துவிட முடியாது. இதே போலத்தான் தமிழ் இனத்தையும் அடக்குமுறை மூலம் பணிய வைத்து விட முடியாது."

வோம்; தமிழர் கூட்டணியின் வாலை ஒட்ட நறுக்குவோம்" என்ற முறையில் தமிழர் பிரச்சினையைப் பகடைக் காயாக வைத்து, சிங்கள மக்களின் வகுப்புவாத உணர்ச்சிக்கு தூபமிட்டு வாக்குவேட்டை நடத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதே மாதிரியான பிரசாரத்தை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வாலிப இயக்கத்தலைவரும், பிரதமரின் மகனுமான திரு. அனுராபண்டார நாயகா ஏற்கெனவே தொடங்கிவிட்டதையும் இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. யூ. என். பீக்கும் — தனிநாடு கோரும் தமிழர் கூட்டணிக்கும் இரகசிய உடன்படிக்கையிருப்பதாக ஒரு ஆதாரமற்ற பூச்சாண்டியை திரு. அனுராபண்டார நாயகா இப்போதே இளப்பத் தொடங்கிவிட்டார்.

[illegible]56ம் ஆண்டு முதல் ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும், தமிழர் பிரச்சினையையே பகடைக்காயாக வைத்து, தென்னிலங்கையில் சிங்களக் கட்சிகள் போட்டியிட்டு வாக்குவே[illegible] டையாடி வருவது தெரி[illegible] ததே;

## அக்கரைப்பற்றில்...

—6-ம் பக்கத் தொடர்

ஹல் "அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வங்குரார்ப்பண வைபவத்துக்கு செல்வி சௌந்தரி கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார். கூட்டத்தில் திருமதி அமிர்தலிங்கம், திரு: அ. அமிர்தலிங்கம், திரு: கணேசலிங்கம் திரு: வேல் முருகு, செல்வி. சோதிமணி, செ. இராசதுரை, திரு. பீட்டர் பொன்கலன், திரு. ஈழ வேந்தன், திருவாளர்கள் சே. மா. செல்லத்தம்பு பா. உ., வி. தர்மலிங்கம் பா. உ; ஆகியோரும் பேசினர்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத்தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி: செல்வி. க. சௌந்தரி, செயலாளர் செல்வி. சி. திருச்செல்வம், துணைச்செயலாளர் க. காந்திமதி, துணைத்தலைவி செல்வி. மு. சரஸ்வதி, பொருளாளர் திருமதி பாலசுந்தரம், [illegible]ற்குழு உறுப்பினர்கள் [illegible]ம் வருமாறு: செல்வி [illegible]. புவனேஸ்வரி, வே: சுஜனி, க. மனோன்மணி, மு: சரோஜினிதேவி, ம. புஸ்பமலர், க. வசந்த குமாரி, இலஞநாயகி, து. மல்லிகாதேவி, ச. கணேசமணி, திருமதி. சண்முகம், திருமதி. பேரின்பம்.

●

## அக்கரைப் பற்று தமிழ்இளைஞர்பேரவை

அக்கரைப்பற்று தமிழ் இளைஞர் பேரவைக் கிளையின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ச. தர்மலிங்கம் துணைத்தலைவர்: இ. மகாலிங்கம், செயலாளர்: த. யோகராஜ், துணைத்தலைவர்: ச. தவராஜா, பொருளாளர்: வி. பாக்கியராசா, துணைப் பொருளாளர்: சீ. சதாசிவம் செயற்குழு உறுப்பினர்கள்: க. சித்திரவேல், க. தம்பிராசா, சி. செல்வராசசிங்கம், மு. திருநாவுக்கரசு, சி. லிங்கசாமி, க. குருநாதபிள்ளை, ம. பரராசசிங்கம், நா. நேசராசா.


கடைசி வாரம்! செல்லமகால்

மயங்குகிருள் ஒரு மாது

முத்துராமன், சுஜாதா, தேங்காய் —நடித்த

பின்னணி: வாணி ஜெயராம், பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ்

நெல்சன் 3-வது வாரம்!

திருமலை

ஜெமினி, ஜெயலலிதா, பத்மினி, சுந்தரராஜன் நடித்த.

கே. எஸ் கோபாலகிருஷ்ணனின்

ஆதிபராசக்தி

(கலர்)

2-வது வாரம்

கெபிட்டி

முத்துராமன் — சிவகுமார்,
ஜெயசித்ரா — விதுபாலா,
அசோகன் — மனோரமா,
தேங்காய்—சுந்தரராஜன்,

— நடித்த —

எங்கம்மா சபதம்

டைரக்ஷன்:

எஸ். பி. முத்துராமன்

6வது வாரம் கெப்பிட்டல்

முத்துராமன், மஞ்சுளா, ஜயந்தி, சுந்தரராஜன் நடித்த—

ஜெமினியின்

எல்லோரும்நல்லவரே

(கலர்)

4வது வாரம் காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

சிவகுமார் கமலஹாசன் ஜெயசுதா —நடித்த

மேல்நாட்டு மருமகள்

(கலர்)

3வது வாரம் லிடோ (யாழ் நகர்)

ஜெய்சங்கர் - சிவகுமார் —நடித்த

எங்க பாட்டன் சொத்து

(கலர்)

மைலன் (கொழும்பு)

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் திரையிடப்பட்டுள்ளது.

சிவாஜி வாணிஸ்ரீ —நடித்த

வசந்த மாளிகை

ஈஸ்மன் கலர்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் [illegible] கொழும்பு 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் ஏப்பிரல் மாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org